Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 19, 2023

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 19, 2023 | ஒளி: 09 கதிர் 152 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## 12 ஆண்டுகளுக்கு ஆட்சிசெய்வதற்கு

# “ஆணை வேண்டும்”


ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் 100 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி நாற்காலியில் அமர்வார் எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன, நகைச்சுவைக்காகவோ அல்லது எடுத்த எடுப்பில் தெரிவிக்கவில்லை தனது பயணத்தின் தெளிவான பார்வையில் இதனை கூறுகின்றேன் என்றார்.

ஜனாதிபதி ரணில் ஓர் அரசியல்வாதி என்பதை விட, பொருளாதார நிபுணராக இருப்பதால், எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நாடு எங்கு இருக்க வேண்டும் என்ற தெளிவான பார்வையுடன் அவர் செயற்படுவார் எனவும் அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான பிட்டகொத்தவில் உள்ள சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“தற்போதைய எதிர்க்கட்சியும் எங்களுடையதுதான்” என தெரிவித்த ஐ.தே.க தலைவர் அநுரகுமார தலைமையில் எதிர்க்கட்சி ஒன்று இருப்பதாகவும், தேர்தலில் உண்மையான எதிர்க்கட்சியை மக்கள் தெரிவு செய்வார்கள் எனவும் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2




# கில்மிஷாவுக்கு வாழ்த்து

தென்னிந்தியத் தொலைக்காட்சியான Zee தமிழ் சரிகமப பாடல் போட்டியில் டைட்டில் வின்னராக தெரிவான கில்மிஷாவுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில், அவரின் சொந்த ஊரான யாழ்ப்பாணம் - அரியாலை கலைமகள் சனசமூக பகுதி மக்கள், வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவருக்கு எமது தமிழ்மிரர் குடும்பமும் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. (முழு விபரம் பக்கம் 6)

முழுச் செய்தி P6

# சந்திரகுப்த கைது



தரமற்ற இம்யூனோகுளோபுலின் இறக்குமதி விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (CID) திங்கட்கிழமை (18) கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

# ‘அஞ்சுகிறார் ஜனாதிபதி’

சுதந்திர மக்கள் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் பதின்மூன்று உறுப்பினர்களும் ஒரே கூட்டணியில் இணைந்து கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அஞ்சுவதாகவும் இதன் காரணமாகவே அவர் பிளவுபடுத்துவதற்கு முயற்சிக்கிறார் எனவும் சுதந்திர மக்கள் பேரவையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டிலான் பெரேரா எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# சிராட்டிகுளம் கிராமத்துக்கான தொடர்பை துண்டித்தது வெள்ளம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குற்பட்ட சிராட்டிகுளம் என்ற கிராமம் பறங்கியாறு பெருக்கெடுத்திருப்பதால் வெளி பிரதேச தொடர்புகள் எதுவுமின்றி பாதிப்படைந்துள்ளது.

இதேவேளை வீடுகளினுள் வெள்ளநீர் மற்றும் ஆற்று நீர் புகுந்துள்ளமையினால் வீடுகளில் கூட உணவுகளை தயார் செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் வர்த்தக நிலையங்கள் இல்லாத நிலையில் 8



கிலோமீற்றர் தூரமுள்ள நட்டாங்கண்டல் பிரதேசத்திற்கு சென்றே பொருட்களை கொள்வனவு செய்யவேண்டும் என்றும் தெரிவித்த மக்கள் பறங்கியாறு பெருக்கெடுத்து குடிமனைக்குள்ளாக பாய்வதால் வைத்தியசாலைக்கு கூட செல்லமுடியாத நிலைமை காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# கத்தரிக்காய் திருடியவர் கைது

■ எம். றொசாந்த்

யாழ். கோப்பாய் பகுதியில் 300 கிலோ கிராம் கத்தரிக்காயை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள கத்தரி தோட்டம் ஒன்றில் கடந்த 07ஆம் திகதி இரவு பெரும் தொகையான கத்தரிக்காய்கள் திருடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



# பயணியின் காதை கடித்து விழுங்கிய நடத்துனர்

தனியர் பஸ்ஸொன்றின் நடத்துனர், பயணி ஒருவரின் காதை கடித்து விழுங்கிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்றில் நடத்துனருக்கும் பயணிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது நடத்துனர் பயணியின் வலது காதின் ஒரு பகுதியை கடித்து விழுங்கியுள்ளதாக மெகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# கொடுத்தவர் தாக்கியதில் வாங்கியவர் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

கடனாக வாங்கிய 800 ரூபாய் பணத்தினை திருப்பி கொடுக்கவில்லை எனக் கூறி, கடன் கொடுத்தவர் தாக்கியதில் கடன் வாங்கியவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஊரெழு பகுதியைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதியான சிங்காரத்தினம் சிவாஸ் குமார் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருப்பி தருவதாகக் கூறி, ஊரெழு பகுதியைச் சேர்ந்த இளைஞனிடம், 800 ரூபாயைக் கடனாகப் பெற்றுள்ளார். அந்த பணத்தினை திருப்பி வழங்காததால், கடந்த 10ஆம் திகதி கடன் கொடுத்த இளைஞன்,

தொடர்ச்சி P2

# மில்கோ தலைவர் இராஜினாமா



மில்கோ (தனியார்) நிறுவனத்தை இந்திய நிறுவனத்திற்கு விற்கும் நடவடிக்கைக்கு எதிராக மில்கோ தலைவர் ரேணுக பெரேரா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளருக்கு அவர் எழுதிய கடிதத்தில்,

தொடர்ச்சி P2

# நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றவும்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதால் டெங்கு நுளம்பு பரவுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம் சார்ள்ஸ், துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



தொடர்ச்சி P2

## வெளிநாடுகளுக்கு செல்லும் விவகாரம்

# தாய்மார்களை தடுக்கும் சட்டத்தை அமுல்

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட தாய்மார்கள் வெளிநாடு செல்வதை தடுக்கும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்தவும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்தது.



தொடர்ச்சி P2



# வசந்தபுரம் மக்கள் பாதுகாப்பாக மீட்பு

■ சண்முகம் தவசீலன்

வெள்ளத்தில் மூழ்கிய வசந்தபுரம் கிராம மக்கள் மீட்கப்பட்டு மன்னாகண்டல் பாடசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# “ஆணை வேண்டும்”

இறுதி நேரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேரும் எனவும் அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். இன்னும் 12 ஆண்டுகளுக்கு நாட்டை ஆட்சி செய்வதற்கான ஆணையை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மக்கள் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர்,

“2024இல் இருந்து இன்னும் 12 ஆண்டுகளுக்கு விக்ரமசிங்கே நாட்டை ஆட்சி செய்ய அனுமதித்தால், இலங்கை ஒரு சக்திவாய்ந்த நாடாக மாறும். இல்லை என்றால், தேசம் மீண்டும் அழிவடையும்” என்றும் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# சந்திரகுப்த கைது

ஹியூமன் இம்யூனோகுளோபுலின் என்ற மருந்தை இறக்குமதி செய்தமை தொடர்பில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகச் சந்திரகுப்த, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.



# கத்தரிக்காய் திருடியவர் கைது

மறுநாள் தோட்ட உரிமையாளர் தோட்டத்திற்குச் சென்ற வேளையில் கத்திரி செடியிலிருந்த கத்திரிக்காய்கள் திருடப்பட்டுள்ளமையை அவதானித்து , கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிராகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கத்திரிக்காய்களைத் திருடிய குற்றத்தில் திருநெல்வேலி பாற்பண்ணை பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

# ‘அஞ்சுகிறார்…

நாவலப்பிட்டியில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் அலுவலகத்தில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும், ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பதவியிலிருந்து அகற்ற எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதை விடக் காலம் தாழ்த்துவது சிறந்ததல்ல என்றார். அரசாங்கத்தில், சுதந்தி மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களும் இருக்கலாமென இரண்டு மூன்று அமைச்சர்கள் கனவு காண்கின்றனர் எனவும் கூறினார்.

# மில்கோ தலைவர் இராஜினாமா



தாம் ஜனவரி 21, 2022 முதல் மில்கோ (பிரைவேட்) லிமிடெட் தலைவராக பணியாற்றி வருவதாகவும், திங்கட்கிழமை (18) பதவியை இராஜினாமா செய்வதாகவும் தெரிவித்தார்.

உள்ளூர் மற்றும் இந்திய நிறுவனம் ஒன்றின் கூட்டு முயற்சியின் மூலம் மில்கோ நிறுவனத்தைத் தனியார் மயமாக்கும் கொள்கை முடிவை அரசு எடுத்திருப்பதால் பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்ததாக அவர் கூறினார்.

# சிராட்டிகுளம் கிராமத்துக்கான தொடர்பை துண்டித்தது வெள்ளம்



மேலும், கால்நடைகளும் வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டுள்ளதாகவும் , சிலவற்றை இறந்த நிலையில் மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்கள் சிறு குழந்தைகளுடன் வாழ்ந்துவரும் நிலையில் வீடுகளில் தண்ணீர் தேங்கி வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழலில் தாம் இருப்பதாகவும், வீடுகளும் இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 67 குடும்பங்களை சேர்ந்த 197 பேர் வசித்துவரும் நிலையில் குறித்த குடும்பங்கள் வெள்ளத்தினால் வெளித்தொடர்புகள் எதுவுமின்றி நிர்க்கதியாக்கப்பட்ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 17 ம் திகதி மாலை 4 மணி வரை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு,பூவரசங் குளம்,விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 284 குடும்பங்களை சேர்ந்த 946 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொடுத்தவர் தாக்கியதில் வாங்கியவர் உயிரிழப்பு

கடன் வாங்கியவருடன் முரண்பட்டு, அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்குதலின் பின்னர் அவரை அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று வீட்டாரிடம் ஒப்படைத்து விட்டு, இளைஞன் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கானவரின் உடல்நிலை மோசமான நிலையில், வீட்டார் அவரை யாழ்,போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக மறுநாள் அனுமதித்துள்ளனர்.

சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (17) உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். அதனையடுத்து தாக்குதலாளியான இளைஞன் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த இளைஞனைக் கைது செய்துள்ள பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தாய்மார்களை…

இலங்கையில் தொழில்புரியும் பெண்களுடைய 0-5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பில் தற்பொழுது காணப்படும் பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்துப் பாராளுமன்றத்தில் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை பற்றி துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 0-5 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகள் தாயின் பாதுகாப்பு இன்றி வளர்ந்துவரும் சூழ்நிலையில் ஏற்படுகின்ற சமூகத்தாக்கம் எதிர்வரும் 20-25 வருடங்களில் சமூகம் என்ற ரீதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தொடர்பிலும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தலைமையில் கடந்த டிசெம்பர் 8ஆம் திகதி கூடியது. 02/2023 ஆம் இலக்க அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய 02 வயது மற்றும் அதற்கு மேலான வயதையுடைய குழந்தைகளைக் கொண்ட தாய்மார் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், இதனால் குழந்தைகள் தாய்ப்பால் பெறும் திறனை இழப்பதுடன், தாய்க்கும் சேய்க்கும் இடையிலான இணைப்பு இழக்கப்படுவதாகக் குழு சுட்டிக்காட்டியது.

மேலும், சிறுவயதிலேயே தாயைப் பிரிந்திருப்பதால் எதிர்காலத்தில் மிகவும் சண்டை சச்சரவுகள் நிறைந்த தலைமுறை உருவாகும் என்றும், தாய் வெளிநாடு செல்வதால் குழந்தைப் பருவம் முதலே பிள்ளைகளுக்கு அரவணைப்புக் கிடைக்காமையால் அவ்வாறான பிள்ளைகள் எதிர்காலத்தில் போதைப்பொருள் மற்றும் ஏனைய குற்றச்செயல்களுக்கு அடிமையாவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும், ஏனையவர்களின் பராமரிப்பில் கீழ் இருக்கும்போது அயல்வீட்டார்கள் மாத்திரமன்றி, தந்தை, பேரன் போன்ற நெருங்கிய உறவினர்களாலேயே அவ்வாறான குழந்தைகள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சிறுவயதிலேயே குழந்தைகளுக்கான பாதுகாப்பான மற்றும் முறையான பரிந்துரைகளின் அடிப்படையில் செயல்படும் பகல்நேர பராமரிப்பு மையங்களின் வலுவான தேவை உள்ளது என்றும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது. மேலும் பகல்நேர பராமரிப்பு மையங்களை ஒழுங்குறுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் குறிப்பிட்ட நிறுவனம் இல்லை எனவும், பகல்நேர பராமரிப்பு மையங்கள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்றும், இவற்றின் தரங்களில் குறைபாடுகள் இருப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட இலங்கையில் உள்ள பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மேற்கண்ட பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும் என குழு கருத்து தெரிவித்தது.

இதன்படி, இலங்கையில் உள்ள பகல்நேர பராமரிப்பு நிலையங்களின் தரத்தை ஒழுங்குபடுத்தவும், 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட தாய்மார்கள் வெளிநாடு செல்வதை தடுக்கும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்தவும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்தது.

இந்த அமர்வில் துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களான முதிதா பிரசாந்தி, டளஸ் அழகப்பெரும, டி.வீரசிங்ஹ, மஞ்சுளா திசாநாயக மற்றும் குழுவின் உறுப்பினர் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்னடத்தைத் திணைக்களம், முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் ஆகியோரும் துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

# நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றவும்

டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப்ப டுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகான்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குறித்த வடிகான்களை சுத்தப்படுத்துவதோடு, வீதியோரங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் பொலிஸாருக்கு, ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் அமுலாகும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஊடாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரத்தரப்பினர் , உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ் மாவட்டத்தில் காணப்படும் அனுமதி அற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுமாறும் ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

# பயணியின் காதை கடித்து விழுங்கிய…

குறித்த பயணி ஞாயிற்றுக்கிழமை (17) நாவின்ன பகுதியிலிருந்து தனியார் பஸ்ஸில் ஏறி கொடகம வரை பஸ்ஸிற்கான பணத்தைச் செலுத்திவிட்டு சாரதி இருக்கைக்கு அருகில் நின்றுள்ளார்.

அப்போது, பேருந்தின் பின்புறம் செல்லுமாறு நடத்துனர் பலமுறை பயணியிடம் கூறியதாகவும், வாக்குவாதத்தின் போது, நடத்துனர் பயணியைத் தாக்கி காதைக் கடித்து விழுங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


மஹரகம ஆசிரியர் கலாசாலைக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், ஹோமாகம நகரை அண்மித்தபோது, குறித்த பயணியின் காது பகுதி காணவில்லை என குறித்த இளைஞருக்கு மற்றுமொரு பயணி தெரிவித்துள்ளார்.

அப்போது, குறித்த பயணி, மெகொட பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பேருந்தை நிறுத்தி, காதின் ஒரு பகுதி காணாமல் போயிருப்பதை அறிந்து, மெகொட பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

அதேநேரம் பஸ்ஸில் மறைந்திருந்த நடத்துனர் மெகொட பொலிஸ் அதிகாரிகளை கைது செய்து காயமடைந்த பயணியை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்ததாக மெகொட பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு, அவிசாவளையில் தனியார் பஸ் ஒன்றின் நடத்துனரான கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மஹரகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளார்.



# வசந்தபுரம் மக்கள் பாதுகாப்பாக மீட்பு

வசந்தபுரம், கெருடமடு, 3ஆம் கண்டம் ஆகிய கிராமங்களைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவில் வசந்தபுரம் மற்றும் கெருடமடு கிராமங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் 3ஆம் கண்டம் பகுதியிலும் சிலர் வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர்.

மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவின் 135 குடும்பங்களைச் சேர்ந்த 408 பேரே இவ்வாறு மன்னகண்டல் அ.த.க பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் . மழை தொடர்ந்து பெய்துவருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று குளங்களுக்கான நீர் வரத்து மிக வேகமாகக் காணப்படுகின்ற நிலைமையில் பல்வேறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளதோடு வான் பாய்கின்ற நீர் மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளமையினால் மக்கள் மிக அவதானமாகச் செயல்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.



# கிழக்கு சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் கடமையேற்பு

அபு அலா

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராக மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் பொறியாளர் என்.சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திங்கட்கிழமை (18) வழங்கி வைத்துள்ளார். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, கிழக்கு மாகாண ஆளுநரினால் இவர் நியமிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் கடமையேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளா கஞ்சாவுடன் பொலிஸார் உட்பட இருவர் கைது



ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடியில் 3 கிலோ 900 கிராம் கேரளா கஞ்சாவுடன் முன்னாள் உதவி பொலிஸ் பரிசோதகர் உட்பட இருவர் ஞாயிற்றுக்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலையடுத்து பூநொச்சிமுனை மற்றும் முதியோர் இல்ல வீதி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் இரு வீடுகளிலிருந்து குறித்த நபர்கள் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்கள் 14 பேர் கைது

எம்.றொசாந்த்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் தமிழக கடற்றொழிலாளர்கள் 14 பேர், ஞாயிற்றுக்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் ஒரு படகும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த போதே , காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்ப்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





வேலை வாய்ப்பு பணியகத்தில்

# “பதிவு செய்திருத்தல் கட்டாயமானதாகும்”

வெளிநாட்டில் பணிப்பெண்களாகவோ அல்லது வேறு தொழில்களுக்கு செல்பவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்திருத்தல் கட்டாயமானதாகும் என நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு பதுளை ஹாலி-எல வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்நது அவர் உரையாற்றுகையில், “பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பிய சக்தி நீங்களே என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை புலம்பெயர்ந்தோர் தினம் கொண்டாடப்படுகின்றது. பெருந்தோட்டத்தை பொறுத்தவரை பதுளை ஹாலி-எல வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் மட்டுமே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பணிப்பெண்களாகவோ அல்லது வேறு தொழில்களுக்கு செல்பவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்கமும் அதிகாரிகளும் பொறுப்புக்குரியவர்களாக இருப்பார்கள்.

இருந்த போதிலும் அநேகமானோர் இடைத்தரகர்கள் மூலமாக முறையற்ற ரீதியில் செல்கின்றனர். அவ்வாறு தொழிலுக்காக செல்பவர்கள் அங்கே பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து தாய் நாடும் திரும்ப முடியாது முறையான ஊதியமும் இன்றி அவதியுறுகிறார்கள். இவர்கள் தொடர்பில் தகவல்கள் பெற்றுக் கொள்வதிலும் பலவித சிரமங்கள் ஏற்படுகின்றது.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்ல இருப்பவர்கள் முறையான அறிவித்தல் மற்றும் வழிகாட்டுதலுடன் செல்வது அவசியம் ஆகும் .

இது தொடர்பில் பல அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் சர்வதேச தொழிலாளர் சம்மேலனத்துடன் (ILO) இணைந்து தேசிய தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன” என தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வெளிநாட்டில் பணிபுரியும் நம் நாட்டவர்களின் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வயதில் மூத்தோருக்கு கண்ணாடி, சக்கர நாற்காலியும் ,சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது .

# நீர்த்தேக்கங்களின் வான் பாயும் நிலை

பலத்த மழையுடன் கூடிய வானிலையால் 50இற்கும் மேற்பட்ட பிரதான நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 80 வீதம் வரை உயர்வடைந்துள்ளதாகத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷனி விதானபத்திரன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மல்வத்து ஓயாவை பயன்படுத்தும்போது, மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் நீர்ப்பாசன திணைக்களம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மல்வத்து ஓயாவின் தாழ் நிலப்பகுதி மக்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாகத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நில்வலா கங்கையின் தாழ் நிலப்பகுதிகளிலும் தொடர்ந்தும் வெள்ள அபாயம் உள்ளதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பல பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





## தத்தெடுத்த 5 வயது சிறுமியை
# கொடுமைப்படுத்திய விரிவுரையாளர்

தத்தெடுத்து வளர்ப்பதற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 5 வயது சிறுமியைக் கொடூரமாகச் சித்திரவதை செய்த சந்தேகத்தின் பேரில் ருஹுணு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட விரிவுரையாளர் ஒருவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாத்தறை பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தெரிவித்துள்ளது.

கம்புருபிட்டியவில் உள்ள பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் குழந்தையொன்று வழக்கத்திற்கு மாறாக அடிக்கடி அழுவதாக மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவிற்கு வழங்கிய தகவலுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, மாத்தறை பிரிவு சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் நிலைய பொறுப்பதிகாரி வருணி கேஷலா போகஹவத்த உள்ளிட்ட குழுவினர் கம்புருபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று சிறுமியை பொலிஸ் காவலில் எடுத்துள்ளனர்.

# டெங்கொழிப்பு இன்றும் தொடரும்



வடக்கு, கிழக்கு, மேல், தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் விசேட டெங்கொழிப்பு வேலைத்திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை (19) யும் தொடருமென தேசிய டெங்கொழிப்பு பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

பருவப் பெயர்ச்சி மழை தீவிரமடைந்துள்ள நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கொழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, இன்று செவ்வாய்க்கிழமை (19) யும் விசேட பூச்சியியல் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 82,036 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் 49 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கொழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

# மரியாதை மற்றும் பரிசோதனை





பாறுக் ஷிஹான்

பெரிய நீலாவணை மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இவ்வாண்டிற்கான வருடாந்த இறுதி அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய உள்ளக மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) இடம்பெற்றுள்ளது.

சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் தலைமையில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க ஒருங்கிணைப்பில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜயபத்ம கலந்துகொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் உடைகள், விடுதிகள், அலுவலகங்கள் என்பவற்றை பார்வையிட்டதுடன், பொலிஸ் நிலையத்திலுள்ள வாகனங்களின் நிலையையும் பரிசோதனை மேற்கொண்டார்.

# ஐஸுடன் இளைஞன் கைது

அஸ்ஹர் இப்றாஹிம்

காத்தான்குடியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞரொருவர் ஞாயிற்றுக்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடி விஷேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றுக்கமைய காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தைச் சோதனையிட்டபோதே, குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 690 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# லஞ்ச் ஷீட்கள் தடை செய்யப்பட்டமை ஆச்சரிய மூட்டுகின்றன

விடுக்கப்படும் அறிவிப்புகளால், குழம்பிப்போய் இருப்போரும் உள்ளனர். நடைமுறைக்கு வரும்போது பார்த்துக்கொள்வோம் என அசட்டையாக இருந்துவிடுவோரும் உள்ளனர். இதில், அசட்டையாக இருப்போரே பெரும்பாலும் வெற்றியீட்டுகின்றனர். குழம்பிப் போனவர்கள் இரத்த கொதிப்புக்கு உள்ளாகி, தங்களையே வருத்திக்கொள்கின்றனர். ஏனெனில், விடுக்கப்படும் அறிவிப்புகள் பல விடயங்களில் அமுல்படுத்தப்படுவதே இல்லை.

'லஞ்ச் ஷீட் தடை, ஒற்றை பாவனை பிளாஸ்டிக் பொருட்கள், யோகட் உண்ணப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கரண்டிகள், குளிர்பானங்களைப் பருகுவதற்குப் பயன்படுத்தப்படும் ஸ்ரோக்கள் ஆகியவற்றுக்கு ஆறு மாதங்களுக்குள் தடைவிதிக்கப்படும் என கேட்டுக்கேட்டுப் புளித்துவிட்டது. எனினும், யோகட் உண்ணுவதற்கு பயன்படுத்தும் கரண்டிகள், கடதாசி மட்டையில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனையவை அப்படியே பயன்படுத்தப்படுகின்றன.

பொலித்தீன் தடை விதிக்கப்பட்டதாக 2006 ஒக்டோபர் 10ஆம் திகதியன்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் 2016 ஜனவரி முதலாம் திகதி முதல் இருபது மைக்ரானுக்கு குறைவான பொலித்தீனுக்கு தடை விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மூன்று கட்டங்களாக பொலித்தீன் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடை செய்ய 2017 செப்டெம்பர் முதலாம் திகதி முதல் முன்மொழியப்பட்டது.

இதன்படி, அனைத்து நிகழ்வுகளிலும் பொலித்தீன் தடை, 20 மைக்ரான்களுக்கு குறைவான பொலித்தீன் விற்பனையைத் தடை செய்வதுடன், 20 மைக்ரானுக்கு குறைவான பொலித்தீன் உற்பத்திக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியைப் பெற்று இறக்குமதி செய்வதற்கும் கட்டுப்பாடுகளை விதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்பிறகு, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக், பெட் பாட்டில்கள் மற்றும் லஞ்ச் ஷீட்கள் மற்றும் இருபது மைக்ரானுக்கு குறைவான பொலித்தீன்களை 2021 மார்ச் 31 முதல், சுற்றுச்சூழல் அமைச்சகம் தடை விதிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை அமுல்படுத்தப்படவுள்ள பொலித்தீன் தடையும் பூஜ்ஜியமாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த நாட்டில் ஒரேயொரு அரசாங்க உத்தரவினால் தடை செய்ய முடியாத அளவுக்கு லஞ்ச் சீட் உள்ளிட்ட பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளமை இதற்கு ஒரு காரணமாகும். பொலித்தீன் பாவனைக்கு மாற்று வழிகளை முன்வைத்து நடைமுறைப்படுத்தாமல் ஒரேயொரு உத்தரவின் மூலம் லஞ்ச் சீட் தடையை நடைமுறையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும் என்று தோன்றவில்லை. மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து களனி பல்கலைக்கழகம் நடத்திய கணக்கெடுப்பின்படி, இலங்கையில் நாளொன்றுக்குப் பயன்படுத்தப்படும் லஞ்ச் சீட்டுகளின் எண்ணிக்கை சுமார் 15 மில்லியன். நாளொன்றுக்குத் தூக்கி எறியப்படும் பொலித்தீன் பைகளின் அளவு 20-22 மில்லியன் ஆகும். ஒரு மாதத்திற்கு சுமார் 20 மில்லியன் கப் தயிர் பயன்படுத்தப்படுகிறது. இந்த முறை லஞ்ச் ஷீட் தடைக்கு முன், விருப்பங்களை ஆராய்வதில் ஆறு மாதங்கள் செலவிடுவது புத்திசாலித்தனமாக இருக்கும். மாற்று வழிகளை முன்வைக்காமல் மீண்டும் தடை விதித்தால், அரசின் உத்தரவைப் புறக்கணிப்பதைச் சாமானியர்கள் வழக்கமாக்கிக் கொள்ள வாய்ப்புள்ளது.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

உலகை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்தவர்கள்.

எனவே, நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள். அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன. மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது.

நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறைசொல்வதும் துன்பம் வந்தால், "பூமியில் ஏன் பிறந்தேன்" எனத் சலிப்படைவதும் சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது. எல்லாமே தங்களுக்கானது எனக் கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்படுவதில்லை.

போரை விரும்புகின்றார்கள். வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளிநாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மக்களை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள். பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

நன்றி– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சிறுத்தைகளால் பீதி

நல்லத்தண்ணி வன ஜீவராசிகள் காரியாலயத்திற்கு உட்பட்ட மஸ்கெலிய-மல்லியப்பு மற்றும் டீசைட் தோட்ட தேயிலை மலைப் பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் காணப்படுவதாக அந்த தோட்டங்களில் பணி புரியும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் வளர்ப்பு நாய்கள் இரவு நேரங்களில் திடீரென குறைப்பதாகவும் காலையில் சென்று பார்க்கும்போது, நாய்கள் காணாமல் போயுள்ளமை தெரியவரும் என்கின்றனர்.

மஸ்கெலியா பிரதான பாதைக்கு அருகில் உள்ள சின்ன சோளங்கந்தை தோட்டத்தில் தேயிலை மலைகள் காடுகளாகக் காணப்படுகின்றன. அங்குச் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன.

அந்த பகுதியில் சிறுத்தைகள் பகல் வேளையில் பதுங்கி இருந்து இரவு வேளையில் தொழிலாளர் குடியிருப்பு பகுதிகளுக்கு நடமாடக் கூடும் எனவும் அந்த தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் பீதியில் உள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நல்லத்தண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் கவனம் செலுத்த முன் வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செதி.பெருமாள்

அஷ்ரபின் மரணம்

# முஸ்லிம்களின் சந்தேகத்தை வெளிப்படுத்திய சந்திரிகா

மொஹமட் பாதுஷா

அதுபோலவே, மிகப் பெரும் முஸ்லிம் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் மரணம் குறித்து, கடந்த 23 வருடங்களாக முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சந்தேகத்தை, தீர்க்கப்படாத மர்மத்தை முன்னாள் ஜனாதிபதியும் அஷ்ரபின் மிக நெருங்கிய அரசியல் சகாவாக கருதப்பட்டவருமான சந்திரிகா அம்மையார் மீண்டும் கிளறி விட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மர்ஹூம் அஷ்ரபின் நினைவு நிகழ்வொன்றில் உரையாற்றிய சந்திரிகா குமாரதுங்க, 'முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் பயணித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளான விடயத்தில் எனக்கு இன்னும் சந்தேகம் இருக்கின்றது. அது உண்மையில் ஒரு விபத்தா அல்லது எதிரிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதியா என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது' என்று கூறியுள்ளார்.

இந்தக் கேள்வியும் சந்தேகமும் அக்காலத்தில் ஜனாதியாக இருந்த சந்திரிகா அம்மையாருக்குக் கூட இன்னும் இருக்கின்றது என்பது சற்று ஆச்சரியமான விவகாரம்தான். ஆனால், இந்த சந்தேகம் அவருக்கு மட்டுமே உரியதல்ல.

மர்ஹூம் அஷ்ரபை இன்று வரை நேசித்து வருகின்ற இலட்சக்கணக்கான முஸ்லிம்களின் மனதில் கடந்த 23 வருடங்களாக இருக்கின்ற சந்தேகமும் இதுதான்.

தம்மை அரசியல் ரீதியாக வழிப்படுத்திய ஒரு முக்கிய தலைவரின் மரணம் இயற்கையானதா? அல்லது செயற்கையாக நிகழ்த்தப்பட்டதா? என்ற கேள்வி குறிப்பாகக் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் மனதின் எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டே இருக்கின்றது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இந்தச் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்கு யாருமே இதுகாலவரை காத்திரமான, செயல்விளைவுமிக்க நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பதுதான் மிக மோசமான வரலாற்றுக் கவலையாகும்.

2000ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி கொழும்பில் இருந்து ஹெலிகொப்டரில் தனது தாய்மண்ணான அம்பாறை மாவட்டத்திற்குப் புறப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகியவற்றின் ஸ்தாபக தலைவரான

எம்.எச்.எம்.அஷ்ரப் மற்றும் குழுவினர் அரநாயக்க மலைத்தொடரின் மேலாக ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

இந்தச் செய்தி முஸ்லிம் சமூகத்தில் அதிலும் குறிப்பாகக் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடையே ஏற்படுத்திய அதிர்ச்சியும் கவலையும் எழுத்தில் எழுத முடியாததாகும். மறுபுறத்தில் இது ஒரு இயற்கை மரணமா, கொலையா, சதித்திட்டமா என்ற பல கேள்விகளும் மக்கள் மனங்களில் எழுந்தன. அரசியலரங்கிலும் இது ஒரு பேசுபொருளானது.

இப்படியொரு சந்தேகம் ஏற்படக் காரணம் அக்காலத்தில் அஷ்ரப் மேற்கொண்ட அரசியல் முன்னெடுப்புக்களும், அவரது நெஞ்சை நிமிர்த்தி அரசியல் செய்யும் பாங்கும், தேசிய அரசியல் உள்ளிட்ட விவகாரங்களில் அவர் கொண்டிருந்த வகிபாகமும் எனச் சுருக்கமாகக் கூற முடியும்.

மக்களின் நம்பிக்கையை வென்ற தலைவராக அஷ்ரப் இருந்த போதும் மறுபுறத்தில் பல தரப்புக்களுக்கு அவர் ஒரு சிம்ம சொப்பனமாக, சவாலாக, தலையிடியாக இருந்தார் என்பது அக்காலத்தில் நினைவுதெரிந்த வயதிலிருந்த ஒவ்வொருவரும் அறிந்த விடயமாகும்.

முஸ்லிம்களுக்கான அரசியல் பெருந்தேசிய அரசியலோடும் தமிழர் அரசியலோடும் சேர்ந்து இயங்கிக் கொண்டிருந்த ஒரு காலத்தில், மிகப் பெரும் துணிச்சலோடு தனது அரசியல் நண்பர்கள் பலருடன் சேர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை ஆரம்பித்தார். இது எதிரிகள் பலரும் எதிர்பார்த்திராத நகர்வாகும்.

தனித்துவ முஸ்லிம் அடையாள அரசியலுக்காக உருவாக்கப்பட்ட மு.கா. குறிப்பிட்ட சில வருடங்களுக்குள் பெரு விருட்சமாக வளர்ச்சி கண்டது.

ஆர். பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க ஆகிய ஜனாதிபதிகளின் அரசியல் நகர்வுகளில் செல்வாக்குச் செலுத்துமளவுக்கு முன்னேறியது. தேர்தல்களில் தீர்மானிக்கும் சக்தியாக மாறியது.

அஷ்ரப் 11 வருடங்கள்தான் பிரதிநிதித்துவ அரசியலில் இருந்தார். அதில் அமைச்சராக இருந்தது 6 வருடங்கள் மட்டும்தான். ஆனால், அவர் செய்த சேவைகள் இன்றும் பேசப்படுகின்றன.

ஆனால், மு.காவின் பேரம் பேசும் சக்தியின் ஊடாக எம்.பி. தெரிவுக்கான வெட்டுப்புள்ளியை குறைத்தமை, முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை முன்வைத்தமை போன்ற உரிமைசார் அரசியல் நகர்வுகளை மேற்கொண்டார். மறுபுறத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், நூற்றுக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்பு என அபிவிருத்தி அரசியலிலும் ஜொலித்தார்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகளும் இன்னபிற ஆயுதக் குழுக்களும் அடக்குமுறையைப் பிரயோகிக்கத் தொடங்கியிருந்த காலமது. வடக்கு முஸ்லிம்கள், வெளியேற்றம், பள்ளிவாசல் படுகொலைகள், கப்பம் பறிப்புகள், கடத்தல் என ஏராளம் அட்டூழியங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன.

இதற்கெதிராக குரல் கொடுக்கவும் போராடவும் அஷ்ரப் குழுவினர் முன்னின்றனர். இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று வரும்போது, முஸ்லிம்களுக்கான பங்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதை அவர் நெஞ்சை நிமிர்த்தி தைரியத்துடன் கூறி வந்தார். இதனால் விடுதலைப் புலிகளின் இலக்குப் பட்டியலில் அவர் உள்வாங்கப்பட்டதாகக் கூறுவார்கள்.

தென்னிலங்கையை மையமாகக் கொண்டு முஸ்லிம்களுக்கான அரசியல் இயங்கிக் கொண்டிருந்த அக்காலத்தில், கிழக்கில் இருந்து ஒரு அரசியல் கட்சியும் தலைவரும் வந்து கொழும்பை ஆட்டிப்படைப்பது சிங்கள அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி, ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குக் கூட எரிச்சலாகவே இருந்தது.

இது இவ்வாறிருக்க, சந்திரிகா அம்மையாருக்கு மிக நெருக்கமான அரசியல்வாதியாக இருந்தாலும் அவர் மரணிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னதாக ஒரு சிறு அரசியல் ஊடல் ஏற்பட்டிருந்ததாக ஊடகச் செய்திகள் வெளியாகியிருந்தன. அத்துடன், மாற்று அரசியல் நோக்கோடு அவர் "நுஆ" என்ற கட்சியையும் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியில் அவரது மரணம் நிகழ்ந்தது. இது செயற்கையான மரணமாக இருக்குமாயின் சில தரப்பின் மீது முஸ்லிம்கள் சந்தேகம் கொண்டனர் எனலாம்.

முதற் கட்டமாக முஸ்லிம்களின் சந்தேகம் புலிகளின் மீது குவிந்தது. அஷ்ரபோடு சென்று பலியான கதிர்காமத்தம்பி இதன் கருவியாக இருந்திருப்பாரா என்று ஒரு சந்தேகம் எழுந்தது. சந்திரிகா அம்மையாரோ அல்லது வேறு அரசியல் தரப்போ இந்த சதியைச் செய்தனவா என்று சந்தேகம் கொண்டனர்.

இது தவிர இதற்குப் பின்னால், வெளிநாட்டு நிகழ்ச்சி நிரல்கள் எதுவும் செல்வாக்குச் செலுத்தியிருக்குமோ என்ற ஒரு கேள்வி பின்னாட்களில் முஸ்லிம் அரசியல் நோக்கர்களுக்கு ஏற்பட்டது.

ஏனெனில், அஷ்ரப் மரணித்து, மு.கா. கட்சிக்கு இணைத் தலைமைகள் நியமிக்கப்பட்டு, பின்னர் றவூப் ஹக்கீம் தனித் தலைவரான பிறகு கட்சியின் போக்குகள் மாறுபட்டன. அரசாங்கங்களும் வெளிநாடுகளும் கட்சியை இலகுவாகக் கையாளும் வாய்ப்புக் கிடைத்தது. எனவே, அவர்களுக்கு அஷ்ரப் ஒரு தலையிடியாக இருந்தாரா என்பதுதான் கேள்வியாகும்.


ஆனால், இந்தக் கேள்விகள், சந்தேகங்களுக்கு எல்லாம் விடைகாண வேண்டிய தேவையும் கடப்பாடும் சந்திரிகா அம்மையாருக்கும் இருந்தது. தனது நண்பரின் மரணத்திற்கு நியாயம் தேடுவது மட்டுமன்றி தனது அரசின் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதைத் தடுப்பதற்காக அதைச் செய்ய வேண்டியிருந்தது.

அவர் எதுவுமே செய்யவில்லை என்று கூற முடியாது. ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். ஆனால், அந்த விசாரணை அறிக்கை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதுமட்டுமன்றி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக முன்னாள் எம்.பி. பசீர் சேகுதாவூத் அவ்வறிக்கையைக் கோரியபோது முழுமையான அறிக்கை கிடைக்கப் பெறவும் இல்லை என்பது ஞாபகமிருக்கலாம்.

சந்திரிகா அம்மையார் 'இன்னும் எனக்குச் சந்தேகமுள்ளது' என்று கூறுகின்றார் என்றால், அந்த விசாரணை அறிக்கையில் அவரே திருப்திப்படவில்லை அல்லது அக்குழு கண்டுபிடிக்காத மர்மங்களும் உள்ளன என்பதுதனே அர்த்தம்?

இதேவேளை, இந்த மரணம் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்துமாறு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்திருக்க வேண்டிய நூறு வீத கடப்பாடு றவூப் ஹக்கீம், பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, ஹசன்அலி, பசீர் என அஷ்ரபின் வழிவந்த அரசியல் வாரிசுகள் எல்லோருக்கும் இருந்தது. இன்னும் இருக்கின்றது.

ஆனால், அதனை யாருமே செய்யாமல் விட்டு விட்டு, எங்களுக்குச் சந்தேகம் இருக்கின்றது என்று கூறி அழுவதற்கு அரசியல்வாதிகள் தேவையில்லை. மாறாக, முஸ்லிம் மக்களுக்கு இருக்கின்ற 23 வருடச் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கே ஆள் தேவை!



# சமயத்திற்கும் மனித ஒழுக்கத்திற்கும் நவீன விஞ்ஞானம் ஓர் அச்சுறுத்தலாகும்




முஹமட் நிஜாம் அஃப்றின்
மெய்யியல் துறை
பேராதனை பல்கலைக்கழகம்

சமயமும் மனித ஒழுக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகவே காணப்படுகின்றது. சமயத்தினை மனிதன் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு நெறிகளுடன் பின்பற்றி வருகின்றான். ஆரம்பக் காலங்களில் மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டுடன். ஒழுக்கமான வாழ்வியலை ஏற்படுத்தும் நிலையுடன் மனிதனுக்கு. ஒழுங்குபடுத்தும் ஓர் கருவூலமாக சமயம் காணப்படுகின்றது.

சமயங்களை பொறுத்தவரையில் கீழைத்தேய சமயங்களாக இருப்பினும் சரி மேலைத்தைய சமயங்களாக இருப்பினும் சரி அவை மனித மேம்பாட்டுத் தன்மையினை உயர்த்தும் நோக்கில் மனித நேயத்தினை மனிதன். உருவாக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் பல்வேறான ஒழுக்க கருத்துக்களை மீறி உரைகளாகக் கொண்டு விளக்குகின்றன. எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரு மனிதன் இன்னும் ஒரு மனிதனுக்கு விதமான இடர்பாடுகளையும் வழங்கக் கூடாது. அவ்வாறான செயற்பாடுகள் குற்றங்கள் எனவும் அக் குற்றங்களுக்கு பொதுவாக இறைவனினால் தண்டனை கொடுக்கப்படும் எனவும் சமயங்களில் கூறப்படுகின்றன. இவ்வாறானநிலைகளில் நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது சமயத்திற்க்கும் மனித ஒழுக்கத்துக்கும் இடையில் ஓர் அச்சுறுத்தலை உருவாக்குகின்றது.

ஏனெனில் மனிதனிடத்தில் ஒழுக்கம் என்ற தன்மைக்குள் பல விடயங்கள் காணப்படுகின்றன. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப சாதனத்தின் வளர்ச்சி ஆனது. மனிதனுடைய நடத்தைகளை மிகவும் இடர்பாட்டுக்குள் கொண்டு செல்கின்றது. அதாவது இலத்திரனியல் சாதனங்களின் உருவாக்கத்தினால் பல்வேறான தீய சிந்தனைகள் மனிதனுக்கு ஊட்டப்படுகின்றன. இலத்திரனியல் சாதனங்களாகக் காணப்படுகின்ற தொலைக்காட்சி கணினி இலத்திரன்கள் வலை அமைப்புகள் தொலைபேசிகள் போன்றவை எல்லாம் வியாபார நோக்கம் கொண்டவையாகவும் அமையப் பெறுவதனால் மனிதனுடைய மன உணர்ச்சிகளைத் தூண்டி இவை உளவியல் ரீதியாக வர்த்தகத்தை மேற்கொள்கின்றன. எந்தக் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்வதற்கும் பெண்கள் ஆபாச ரீதியான காட்சிகளுடன் முதன்மைப்படுத்தப்பட்டு வியாபாரம் செய்யப் படுகிறார்கள். இவை எல்லாம். பாலியல் ரீதியான





நடத்தைகளை மனிதனுக்குத் தூண்டுகின்றது அது மட்டுமின்றி மனிதனுக்கு மிகவும். முதன்மையான உறவாகக் கூறப்படுவது திருமண உறவு குழந்தை பாக்கியம் என்பனவை ஆகும்.

இவற்றின் அடிப்படையில் பரிசோதனை குழாய் குழந்தை என்பதையும் விஞ்ஞான ரீதியான தன்மையில் உருவாக்கப்படுகின்றது. இவை பற்றிய கருத்தாக்கங்களும் மனித நடாத்தயின் ஒழுக்கத்தினை மீறிச்செல்லும் செயலாகக் காணப்படுகின்றது. நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளினால் ஆயுதங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாயுதங்கள் மனிதனுடைய உயிர்களைப் பறிக்கின்றன. ஓர் உயிரானது இறைவனினால் படைக்கப்படுகின்றது என்பது எல்லா சமயங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற விடயமாகும். வியாபார ரீதியில் நாடுகள். ஆயுதங்களை. விற்பனை செய்கின்றன. இவை ஓர் அழிவுகளைக் கொடுக்கும் தன்மை கொண்டவை ஆகும் மனிதன் வாழும் சூழல் இறைவனினால் அழகாகப் படைக்கப்பட்டிருப்பது முக்கியமானதொரு விடயமாகும். இதனைச் செயற்கையான ரீதியாகச் செய்யும் ஆயுத பாவனைகள் பணத்திற்காக விலை. மதிக்க முடியாத உயிரை கூட தர்மம் என்ற ரீதியில் இருந்து பாதை தவறிச் செல்கின்ற தன்மை இணை செய்கின்றது. இதனால் நாடுகளுக்கு இடையே அமைதியின்மை சுதந்திரமின்மை பயங்கரவாதம் அடிமையான வாழ்வு மனிதனை மிருகமாகப் பார்க்கின்ற தன்மை. மனிதநேயம் இல்லாத தன்மை போன்றவை காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி மருத்துவம் என்ற ஒழுக்க ரீதியான தொழிலானது மனிதனது உயிரைக் காப்பாற்றுகின்ற ஒரு புனித தொழிலாகக் காணப்படுகின்றது. இத்துறைக்கும் நவீன விஞ்ஞானம் முன்னேற்றத்தின் அடிப்படையில் வியாபார நோக்கத்தினை மையப்படுத்தி போலியான மருந்துகள் உருவாக்கப்படுவதையும் இதனால் மனிதர்கள் இறக்கின்ற தன்மையையும் நவீன வசதியான விஞ்ஞான தொழில்நுட்பம் கொண்ட வைத்தியசாலைகளில் மனிதனுடைய உறுப்புக்கள்

களவாடப்பட்டு விற்கப்படுவதையும் மனிதனுடைய நடத்துக்குப் பங்கம் செய்யும் ஒன்றாகவே. நவீனத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் அமைகின்றது எனலாம்.



# திருவெம்பாவையும் மார்கழி மகத்துவமும்

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் திங்கட்கிழமை (18) அதிகாலை ஆரம்பமாகியது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் திங்கட்கிழமை (18) அதிகாலை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இறுதியில் பத்தாம் நாள் (27.12.2023) செவ்வாய்க்கிழமை திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இக்காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையாம் அதிகாலை 4-6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இவ் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். தை மாதம் தொடங்கி ஆனி வரை அவர்களுக்குப் பகல் பொழுதாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி வரை இரவுப் பொழுதாகவும் அமையும்.

அப்படிப் பார்க்கும்போது அதிகாலையான பிரம்ம முகூர்த்தம் மார்கழியில்தான் வருகிறது. தேவர்களுக்கே பிரம்ம முகூர்த்தமாக இருக்கிறபடியால், மார்கழி மாதம் மானிடர்களுக்கும் சிறந்ததாகிறது.

மாதங்களில் நான் மார்கழி என்று பகவான் மகாவிஷ்ணு கூறியுள்ளார். மார்கழி மாதம் தனுர் மாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாதத்தில் தனுசு ராசியில் குருவின் வீட்டில் சூரியன் குடியேறுகிறார்.

அப்படிச் சிறப்புகள் நிறைந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் குளித்து விட்டு பாவை நோன்பு இருந்ததால் மனதிற்குப் பிடித்த கண்ணுக்கு நிறைந்த கணவன் கிடைப்பார் என்பது நம்பிக்கை.


மகத்துவம் நிறைந்த மார்கழியில் உலக நாட்டங்களைக் குறைத்து, இறைவனிடமும் அவர் திருவடி சார்ந்த செயல்பாடுகளிலுமே மனம் ஒன்ற வேண்டும் என்பதற்காகத்தான் வேறெந்த நிகழ்வுகளையும் நடக்காமல் பார்த்துக் கொண்டார்கள். அதன் வழியொட்டியே மார்கழியில் சுப நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதேநேரம், இறைவனிடம் மனம் லயிக்க வேண்டும் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும்'.

மார்கழியில் அதிகாலை எழுந்து குளித்து விட்டு வாசல் தெளிப்பதும் மனதுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் புத்துணர்ச்சி தரும். சூரியனிடம் இருந்து வருகிற ஓசோனின் தாக்கம் மார்கழி அதிகாலையில் அதிகமாக இருக்கும். இதனால் அதிகாலையில் வெளியே வருவதால் அந்தக் காற்றும், கதிரும் உடலை வலிமைப்படுத்தும் என்பதால்தான் அதிகாலை குளியலை முன்னோர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

பெண்கள் அதிகாலையில் நீராடி பாவை நோன்பு நோற்று பெருமாளை வணங்கி திருப்பாவை பாடுகின்றனர். அந்த கண்ணனே தங்களுக்குக் கணவனாக வரவேண்டும் என்பது பல பெண்களின் கனவாக உள்ளது.

அனுமன் ஜெயந்தி வருவதும் இந்த மார்கழியில்தான்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மார்கழியில் விடியற்காலம் விஷ்ணு சஹஸ்ரநாமம் படிப்பது மற்றும் திருப்பாவை படிக்க இறைவன் அருள் கிடைக்கும்.









## திருவெம்பாவை

மார்கழி மாதத்தில்தான் வருகிறது. சிவனுக்கு உகந்த திருவாதிரை திருவிழா வருகிறது. சிவபெருமானின் பக்தைகள் நோன்பு நோற்பதற்காகத் தோழியை எழுப்பச் செல்லும் காட்சி திருவெம்பாவையிலும் வருகிறது. சிவனுடைய அடியார்களே கணவனாக வர வேண்டும். அவனோடு சேர்ந்து சிவனைத் தொழ வேண்டும் என்பதே திருவெம்பாவையில் வருகிற பாவை நோன்பின் நோக்கம்.

## மார்கழி மாண்பு

மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு வாசலில் கோலமிடுவது தொன்றுதொட்டு நடந்துவருகிறது. மாட்டுச் சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவதும் நடக்கும். மாட்டுச் சாண உருண்டையில் பூசணிப்பூவை செருகி, கோலத்துக்கு நடுவே வைப்பது மார்கழி முழுக்கவே நடைபெறும். சில வீடுகளில் அந்தப் பூ உருண்டையை வரட்டியாகத் தட்டி சேகரித்து சிறுவீட்டுப் பொங்கலன்று ஆற்றில் விடுவார்கள்.

## கல்யாணம் கை கூடும்

அக்காலத்தில், திருமணத் தரகர்களோ, மாப்பிள்ளை - பெண் தேவை என்பதற்காக வெளியிடப்படும் கல்யாண விளம்பரங்களோ கிடையாது. எந்த வீட்டில் பெண் அல்லது பிள்ளை திருமணத்துக்குத் தயாராக இருக்கிறார்களோ, அந்த வீட்டின் வாயிலில் மட்டும் கோலத்தின் மேல் பூசணிப் பூ வைப்பார்கள். ஒட்டு மொத்தமாக எல்லா வீடுகளிலும் வைக்க மாட்டார்கள். மார்கழி மாத அதிகாலையில் வீதி பஜனையில் வருபவர்களின் பார்வையில் இந்தப் பூக்கள் தென்படும். விவரத்தைப் புரிந்து கொள்வார்கள். தை மாதம் பிறந்த உடனே பேசி, கல்யாணத்தை முடிப்பார்கள். இதன் காரணமாகவே மார்கழி மாதத்தில் வீட்டு வாயிலில் இருக்கும் கோலத்தில் பூக்களை வைத்தார்கள்.

## மார்கழி மகத்துவம்

அதுபோலவே மார்கழி மாதத்தில் பல புராதன நிகழ்வுகளும் நடந்துள்ளன. மகாபாரத யுத்தம் மார்கழி மாதத்தில் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. திருப்பாற்கடல் கடையப்பட்டபோது, முதலில் விஷம் எழுந்ததும், அதனை சிவன் உட்கொண்டு, உலக மக்கள் அனைவரையும் காப்பாற்றியதும் இதே மார்கழி மாதத்தில்தான். இந்திரனால் பெரு மழை வெள்ளம் உருவாக்கப்பட்டு கோகுலத்தில் அனைவரும் துன்பப்பட்டபோது, கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான்.

பகவத்கீதை பிறந்ததும் இந்த மாதத்தில்தான்.

சூடிக்கொடுத்த சுடர்கொடியாளின் மாதம் இது. ஆண்டாளின் பாசுரங்களை தியானித்து பலனை அடைவோம் வாருங்கள்.




சரிகமப லிட்டில் சேம்பியன்ஸ் நிகழ்ச்சியில்

# யாழ் கில்மிஷா வெற்றி

## கண்டியை சேர்ந்த அசானிக்கான வாய்ப்பு கைநழுவியது

ஜீ தமிழில் (Zee Tamil) ஒளிபரப்பாகி வரும் சரிகமப லிட்டில் சேம்ப்ஸ் நிகழ்ச்சியின் இறுதிச் சுற்று ஞாயிற்றுக்கிழமை (17) நேரலையாக ஒளிபரப்பரப்பாகியது.

இந்நிகழ்ச்சியில் யுவன் சங்கர் ராஜா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று வெற்றியாளரை அறிவித்து 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். ரசிகர்கள் எதிர்பார்த்தபடியே இறுதிச்சுற்றில் இலங்கையைச் சேர்ந்த கில்மிஷா வெற்றிபெற்றார்.

சரிகமப லிட்டில் சேம்ப்ஸ் சீசன் 3 இன் வெற்றிபெற்ற கில்மிஷாவிற்கு ரசிகர்கள் பிரபலங்கள் பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

அவருடைய பாடும் திறமை பலராலும் வியக்கப்பட்டு தன்னுடைய தாய் மாமா மற்றும் போரில் இறந்தவர்களைப் பற்றிப் பேசி பலரையும் ஆரம்பத்திலேயே கில்மிஷா கண்கலங்க வைத்திருந்தார்.

அதைத் தொடர்ந்து ஜூனியருக்கான நிகழ்ச்சி ஆரம்பத்தில் 28 போட்டியாளர்களோடு தொடங்கப்பட்டது. இதில் ஒவ்வொரு கட்டத்திலும் சில போட்டியாளர்கள் வெளியேறி கடைசியாக ரிஷிதா ஜவகர், கில்மிஷா, சஞ்சனா, ருத்தேஷ்குமார், கனிஷ்கர் மற்றும் கவின் என ஆறு பேர் இறுதி நிகழ்ச்சிக்குத் தேர்வாகி இருந்தனர்.

இந்தநிலையில், கண்டியைச் சேர்ந்த அசானியும் இந்த நிகழ்ச்சியில் போட்டியாளராகக் கலந்து கொண்டிருந்தார். அசானியால் முதல் வாரத்தில் நிகழ்ச்சியில் பங்கு பெற முடியாமல் இருந்த நிலையில், பிறகு பல போராட்டங்களுக்கு மத்தியில் சில வாரங்கள் கழித்து பலருடைய முயற்சியால் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் அசானிக்கு ஒரு வாய்ப்பு கொடுப்போம் என்று நினைத்திருந்த ஜீ தமிழ் பிறகு மக்களின் ஆதரவால் தொடர்ச்சியாக அசானிக்கு வாய்ப்பு கொடுத்திருந்தனர்

கில்மிஷா மற்றும் அசானி இருவரும் கலந்து கொண்டிருந்த நிலையில், இறுதிக் கட்டத்தில் அசானி நுழையவில்லை என்பது ரசிகர்களுக்கு வருத்தத்தை அளித்துள்ளது.

ஆனால், கில்மிஷா வெற்றி பெற்றது ரசிகர்கள் மட்டுமல்லாமல் இலங்கை மக்களுக்கும் அதிகமாகச் சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், கில்மிஷா தன்னுடைய சமூக வலைத்தள பக்கத்தில் "தன் வெற்றியை மண்ணுக்கு சமர்ப்பிப்பதோடு, ஈழத்தில் உயிர் நீத்த உறவுகளுக்காகவும் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கில்மிசாவை சென்னைக்கு அனுப்பி வைப்பதற்கான தூதரக ஏற்பாடுகளை மேற்கொண்ட மலையக மக்கள் முன்னணியின் சர்வதேச உறவுகளுக்கான செயலாளரும் தமிழ்நாடு மகா சித்தர்கள் அறக்கட்டளை இலங்கைக்கான தர்மகர்த்தாவுமான எச்.எச்.விக்ரமசிங்க, அவருக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.


அசானி


எச்.எச்.விக்ரமசிங்கவுடன் கில்மிஷா

# 8 ஆண்டுகள் மதுவுக்கு அடிமையான ஸ்ருதி





கமல் ஹாசனின் மூத்த மகளான ஸ்ருதி ஹாசன், பாடுவதில் பெரிய ஆர்வம் கொண்டவர். ஸ்ருதி பாடகியாக வலம் வருவார் என்று பார்த்தால், ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா நடித்து ஏழாம் அறிவு படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார்.

ஸ்ருதி ஹாசன், தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, இந்தி, கன்னடம் உள்ளிட்ட மொழிகளிலும் நடிதுள்ளார்.

தற்போது, இயக்குநர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் உருவாகியுள்ள சலார் திரைப்படத்தில் பிரபாசுக்கு ஜோடியாக நடித்துள்ளார். ரசிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த படம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என 5 மொழிகளில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு டிசம்பர் 22ஆம் திகதி வெளியாக உள்ளது.

இந்நிலையில், ஸ்ருதி ஹாசன் பிரபல பத்திரிக்கைக்கு அளித்துள்ள பேட்டியில், "என் வாழ்நாளில் எட்டு ஆண்டுகள் மதுவுக்கு அடிமையாக இருந்தேன். அந்த நாட்களில் விருந்துக்கு சென்றால், நான் நிதானமாக இருக்கமாட்டேன். நண்பர்களுடன் குடிப்பதை பெருதும் விரும்பினேன். ஆனால், நான், ஒரு போதும் போதைப்பொருளை பயன்படுத்தியது இல்லை.

அந்த 8 ஆண்டுகள் மது என் வாழ்க்கையை ஆட்டிப்படைத்தது, தற்போது அதிலிருந்து மீண்டு இருக்கிறேன். இப்போது அதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. அது என் வாழ்க்கையின் ஒரு கட்டம். பலரும் இதைக் கடந்து அதிலிருந்து மீண்டு வந்தவர்கள் தான்" என்று மனம் திறந்து பேசியுள்ளார்.

# இரண்டாவது திருமணம்?



தமிழ், தெலுங்கு மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வந்த சமந்தா, முதலில் சித்தார்த்தை காதலிப்பதாகவும் சில காரணங்களால் இரண்டு பேரும் காதலை முறித்துக்கொண்டதாகவும் கூறப்பட்டது.

பின்னர், விண்ணைத்தாண்டி வருவாயா படத்தின் தெலுங்கு ரீமேக்கில் நாக சைதன்யாவுடன் நடித்தபோது, அவரை காதலித்தார். இதனையடுத்து இரண்டு வீட்டார் சம்மதத்துடன் அவர்களது திருமணம் கோவாவில் நடைபெற்றது.

ஆனால், இரண்டு பேரும் பிரிவதாக சில வருடங்களுக்கு முன்பு அறிவித்தனர்.

அதற்கு காரணம் சமந்தா திருமணத்துக்கு பிறகும் நடித்ததுதான் என்று பரவலாக பேசப்பட்டது. பின்னர், புஷ்பா படத்தில் "ஊ சொல்றியா மாமா" பாடலில் போட்ட ஆட்டத்தை தொடர்ந்து படங்களில் கமிட்டாகி நடித்து வந்தார்.

ஆனால், அவருக்கு மையோசிடிஸ் நோய் வந்தது.

இதன் காரணமாக தீவிர சிகிச்சை எடுத்து சில காலம் கழித்து இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கினாலும், இப்போது தற்காலிகமாக ஒய்வு எடுத்திருக்கிறார்.

இதற்கிடையே குஷி படத்தில் நடித்தபோது விஜய் தேவரகொண்டாவை காதலிப்பதாக கிசுகிசுக்கள் கிளம்பின. ஆனால், இந்த கிசுகிசு குறித்து சமந்தாவும் விஜய் தேவரகொண்டாவும் அமைதியே காத்து வருகின்றனர்.

அதேசமயம், சமந்தா விரைவில் இரண்டாவது திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று அவரது ரசிகர்கள் அக்கறையோடு கூறி வந்தனர். இந்நிலையில், அந்த விவகாரம் குறித்து சமந்தாவிடம் ரசிகர் ஒருவர் நீங்கள் இரண்டாவது திருமணம் செய்துகொள்வார்களா என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சமந்தா, "அது தவறான முடிவு. 2023ஆம் ஆண்டு நிலைவரப்படி முதல் திருமணம் செய்தவர்களின் விவாகரத்து சதவீதம் 50 சதவீதம், இரண்டாவது திருமணம் செய்தவர்களின் விவகாரத்து 67 சதவீதம்; மூன்றாவது திருமணம் செய்து கொண்டவர்களின் விவாகரத்து 73 சதவீதம்" என குறிப்பிட்டுள்ளார்.

# டொப் 50 பட்டியலில் நடிகர் விஜய்



லண்டனில் உள்ள பிரபல வார இதழான ஈஸ்டர்ன் என்ற பத்திரிக்கை ஆசிய அளவிலான டொப் 50 பிரபலங்கள் பற்றிய பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இது 2023ஆம் ஆண்டிற்கான பட்டியல் ஆகும்.

இந்த பட்டியலில் முதல் இடத்தை இந்த ஆண்டு பதான், ஜவான் என அடுத்தடுத்து மாபெரும் வெற்றி படங்களை கொடுத்த பொலிவூட் நடிகர் ஷாருக்கான் பிடித்துள்ளார்.


அதேபோல், இந்த டொப் 50 பிரபலங்களில் இரண்டாவது இடத்தை பொலிவூட் நடிகை ஆலியா பட் பிடித்துள்ளார்.

அத்துடன், இந்த பட்டியலில் தென்னிந்திய சினிமா துறையில் மிகவும் பிரபலமான நடிகரான தளபதி விஜய் இடம் பிடித்துள்ளார்.

இந்த ஆண்டு வாரிசு மற்றும் லியோ வெற்றி படங்களை கொடுத்த விஜய் டொப் 50 ஆசிய பிரபலங்கள் பட்டியலில் எட்டாவது இடத்தை பெற்றுள்ளார். முதல் பத்து இடத்தில் இடம் பிடித்தவர்களில் தென்னிந்திய சினிமாவை சேர்ந்த ஒரே பிரபலம் நடிகர் விஜய் தான்.

இதன்படி, முதல் 10 இடங்களில் இந்தியாவை சேர்ந்த நான்கு நடிகர்கள் இடம் பிடித்துள்ளனர். மேலும், இந்த பட்டியலில், அமிதாப் பச்சன், அரிஜித் சிங், தீபிகா படுகோனே, அனில் கபூர், அர்மான் மாலிக் உள்ளிட்ட இந்திய பிரபலங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# சிவகுமார் தடை போட்டாரா? மனந்திறந்த ஜோதிகா!



முன்னணி நடிகையாக வலம் வந்த ஜோதிகா, நடிகர் சூர்யாவை திருமணம் செய்துக் கொண்ட பின்னர் நடிப்புக்கு பெரிய இடைவெளி விட்டார்.

இந்த நிலையில், ஜோதிகாவை நடிக்கக் கூடாது என சிவகுமார் தான் கூறினார் என்றும் ஜோதிகாவும் சூர்யாவும் மும்பைக்கு குடியேறவும் அவர் தான் காரணம் என்றும் வதந்தி வெளியாகியது. தற்போது அதற்கு ஜோதிகாவே சரியான விளக்கத்தை கொடுத்திருக்கிறார்.

15 வயதில் சினிமாவில் நடிக்க வந்த ஜோதிகாவுக்கும் இப்போ இருக்குற ஜோதிகாவுக்கும் நிறைய மாற்றம் இருப்பதாக தெரிவித்துள்ள அவர், 10 வருஷத்துக்கு முன்பு இருந்ததை விட 5 வருஷத்துக்கு முன்பு இருந்ததை விட போன வருஷம் இருந்ததை விட இந்த வருஷம் ரொம்பவே மாறிவிட்டேன் எனக் கூறியுள்ளார்.

சினிமாவில் நடிக்கக் கூடாது என மாமா சிவகுமார் உங்களை தடுத்தாரா என்கிற கேள்விக்கு பதிலளித்த ஜோதிகா, அந்த வீட்டில் தனக்கு ரொம்ப சப்போர்ட்டாக இருந்ததே என் அப்பா சிவகுமார் தான் என பதில் அளித்து சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

திருமணத்துக்கு பிறகு 15 ஆண்டுகள் சென்னையில் தான் இருந்தாகவும், திருமணத்துக்கு பிறகு பெண்கள் பிறந்த வீட்டை மறந்து விட வேண்டும் என்கிற எழுதப்படாத ரூல்ஸ் இங்கே இருப்பதாகவும், கொவிட் நேரத்தில் தன் பெற்றோர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், அடிக்கடி மும்பைக்கு விமானத்தின் மூலம் பறக்கவும் முடியாத நிலையில், சூர்யாவிடம் கூறியதும் அவரும் ஓகே சொல்லி விட்டு மும்பையில் குடியேறச் சம்மதித்தார் என்று ஜோதிகா குறிப்பிட்டுள்ளார். அதற்காக வீட்டில் எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றும் பண்டிகை நாட்கள் என்றால் ஒன்றாகக் கூடி சந்தோஷமாகக் கொண்டாடி வருகிறோம் என்றும் கூறிய ஜோதிகா இது தற்காலிகமானது தான் என்றும் மீண்டும் சென்னைக்கு வந்து விடுவேன் என்றும் கூறியுள்ளார்.

# நிகழ்வுகள்...





## கிறிஸ்மஸ் வருடாந்த விழா

கிறிஸ்மஸ் வருடாந்த சுவிசேஷ விழா திருகோணமலை YMCA மண்டபத்தில் போதகர் கலாநிதி க.முரளீதரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (17) நடைபெற்றது.

– அபு அலா






## பெண் பயனாளிகளுக்கு வல்லங்கள்...

திருகோணமலை–குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செந்தூர் பிரிவில் கடல் மட்டி சேகரிப்பினை வாழ்வாதாரமாக கொண்ட 60 பெண் பயனாளிகளுக்கு குளோபல் வன் ஸ்ரீலங்கா (Global One–SriLanka) நிறுவனத்தினால் வல்லங்களை சனிக்கிழமை (16) வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது, Global One–SriLanka பணிப்பாளர் முகம்மது அன்சாரி கலந்துகொண்டுள்ளதுடன் "வாழ்க்கை மாற்றத்திற்கான வாழ்வாதாரம்: கரையோர பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான மானியம்" எனும் இத்திட்டமானது பின்தங்கிய கரையோர சமூகங்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக வாழ்வாதார உதவி வழங்குதலை நோக்காக கொண்டமைந்துள்ளது.

– எப்.முபாரக்





## வருடாந்த ஒளிவிழா

மாத்தளை–உன்னஸ்கிரிய வாணி தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த ஒளிவிழா, அதிபர் மேகவர்ணன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் வியாழக்கிழமை (14 ) இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பன்விலை தேவஸ்தானத்தின் பிதா அருட்தந்தை ஹர்ஷன மிரண்டா கலந்துக்கொண்டிருந்ததுடன், விசேட அதிதிகளாக அதிபர் மாணிக்கம் தியாகராஜா, சமாதான நீதவான் ஜயகுமார் ஷானும் கலந்து சிறப்பித்தனர்.










## கடவளையில் கௌரவிப்பு...

கினிகத்ஹேனை– கடவளை விக்னேஸ்வரா கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியரையும் கௌரவித்து பரிசில் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் டி.தெய்வேந்திரன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் சனிக்கிழமை (16) இடம்பெற்றது. இந்நிகழ்வை பெற்றோர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

– இரா.யோகேசன்



## கௌரவிப்பு...

மலையக கலை கலாசார ( இரத்தின தீபம் ) சங்கத்தின் ஸ்தாபகர் இராஜா ஜன்கிஸை கௌரவிக்கும் நிகழ்வு, கண்டியில் ஞாயிற்றுக்கிழமை ( 17 ) இடம்பெற்றது. இதில், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரும் கலந்துகொண்டார்.







## வவுச்சர்கள் வழங்கி வைப்பு

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பாதணிகளை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களை வழங்கும் செயல்பாடு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் ஆரம்பிக்கப்பட்டு, கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள 677 கிராமிய பாடசாலைகளைச் சேர்ந்த 1,57,698 மாணவர்களை இனங்கண்டு 3,000 ரூபாய் பெறுமதியான இலவச பாதணி வவுச்சர்களை வழங்கி வைத்துள்ளார்.

– எம். எஸ். எம். நூர்தீன்







## கௌரவிக்கும் நிகழ்வு

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியம் ஏற்பாடு செய்த முப்பெரு விழா நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் செயலாளர் வீ.ரி.ஹனூன் தலைமையில் சனிக்கிழமை (16) இடம்பெற்றது.

இதன் போது 2023 ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர்கள் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

– பாறுக் ஷிஹான்









## கௌரவிப்பு

'மான்புமிகு மலையகம் 200' தலைமன்னார் முதல் மாத்தளை வரை முன்னெடுக்கப்பட்ட நடைபவனியில் பங்கேற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, பொகவந்தலாவை ஸ்ரீ தண்டாயுதபானி ஆலயத்திலுள்ள, கதிரேசன் மண்டபத்தில், சனிக்கிழமை (17) நடைபெற்றது.

இந்த நிகழ்வை, பிரிடோ அமைப்பின் சார்பில் பொகவந்தலாவ பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.








## விழிப்புணர்வு நிகழ்வு

சோளன் பயிற்ச்செய்கையில் படைப்புழு கட்டுப்பாடு தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வொன்று விவசாயத்திணைக்க ளத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் கீழுள்ள களுமுந்தன் வெளிக் கிராமத்தில் திங்கட்கிழமை(18) நடைபெற்றது.

– வ.சக்தி


அமெரிக்கா

# ரூ.489 கோடி இராணுவ உதவி வழங்கும் அமெரிக்கா



ஜப்பானுக்கு அதன் அண்டை நாடுகளான சீனா, வடகொரியா போன்றவற்றிடம் இருந்து அவ்வப்போது அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இதனை சமாளிக்க நாட்டின் இராணுவ பலத்தை அதிகரிக்க ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவிடம் இருந்து இராணுவ உதவியை ஜப்பான் அரசாங்கம் கோரியது. இந்நிலையில், ஜப்பானுக்கு இராணுவ உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. அதன்படி சுமார் ரூ.489 கோடி மதிப்பிலான சைட் விண்டர் ஏவுகணை உட்பட பல்வேறு நவீன ஆயுதங்களை வழங்க அமெரிக்க பாதுகாப்பு துறை ஒப்புதல் அளித்துள்ளது.

ரஷ்யா



எங்கள் இலக்கு முடியும் வரை

## "உக்ரேனில் அமைதி திரும்பாது"

உக்ரேன் நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாடு மீது ரஷ்யா போர் தொடுத்து வருகிறது. கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா ,இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவி, பொருளாதார ரீதியாக உதவிகளை வழங்கி வருகின்றன.

ரஷ்யா தொடர்ந்து உக்ரைன்மீது தாக்குதல் நடத்தி தனது கட்டுப்பாட்டுக்குள் உக்ரேனைக் கொண்டுவர தீவிரம் காட்டி வருகிறது. இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின், செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "உக்ரேனில் மொத்தம் 6 லட்சத்து 17 ஆயிரம் படைவீரர்கள் முகாமிட்டுள்ளனர். எனவே மேலும் படைகளை அணிதிரட்ட வேண்டிய அவசியம் இல்லை. எங்களின் இலக்கு நிறைவடையும் வரை உக்ரைன் நாட்டில் அமைதி திரும்பாது" என தெரிவித்தார்.

லிபியா

## நடுக்கடலில் கவிழ்ந்த படகு; 61 பேர் பலி

உலகில் மிக ஆபத்து நிறைந்த புலம்பெயர் வழிகளில் ஒன்றாக மத்திய தரைக்கடல் பகுதி நீடித்து வருகிறது.

இந்நிலையில், லிபியாவின் ஜ்வரா நகரில் இருந்து படகு ஒன்றில் 86 பேர் அகதிகளாக சென்றுள்ளனர்.

இதன்போது திடீரென படகு நடுக்கடலில் கவிழ்ந்துள்ளது. இதனால், படகில் இருந்த சிலர் கடலில் குதித்து நீந்தி கரையை அடைந்துள்ளனர். எனினும், அகதிகளில் 61 பேர் நீரில் மூழ்கி விட்டனர் என லிபியாவில் உள்ள சர்வதேச அகதிகளுக்கான அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இத்தாலி வழியே ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகள் செல்வதற்கான முக்கிய இடங்களாக லிபியா மற்றும் துனீசியா ஆகிய நாடுகள் உள்ளன.

இந்த இரு நாடுகளில் இருந்தும் 1.53 இலட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள் இத்தாலிக்கு நடப்பு ஆண்டில் சென்றுள்ளதாக ஐ.நா. அகதிகள் முகமை தெரிவிக்கின்றது.



திருப்பூர்

## தலித்துக்கள் காலணிகள் அணியக்கூடாது

திருப்பூர் மாவட்டம் உடுமலையில் உள்ள ராஜாவூர் மற்றும் மைவாடி கிராமங்களில் தலித் மக்கள், காலணிகள் அணியக்கூடாது என்ற சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

திருப்பூர் மாவட்டம் மடத்துவாக்கத்தில் உள்ள இந்த இரண்டு கிராமங்களில் தலித் மக்களை தாழ்வாக நடத்தும் குற்றம் தொடர்ந்து நடைபெறுவதாக கூறப்படுகிறது.

தேநீர் கடைகளில் தலித் மக்களுக்கு மட்டும் பேப்பர் கப்புகளைப் பயன்படுத்துவது, காலணிகள் அணிவதற்கு தடை விதிப்பது போன்ற தீண்டாமைக் குற்றங்கள் தொடர்ந்து நடந்துவருவதாகக்



கூறப்படுகிறது. திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ் புலிகள் கட்சியினர் அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த ஒடுக்குமுறைகள் பல ஆண்டுகளாக இங்கு கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும் மீறுபவர்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடைபெறும் எனவும் மக்கள் தெரிவிப்பதாக சிபிஎம் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்டச் செயலாளர் எம்.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

புது டெல்லி

## 15 மொழிகளில் திருக்குறள்

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் 2ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியை பிரதமர் மோடி தொடங்கி வைத்து, 15 மொழிகளில் திருக்குறளை வெளியிட்டார். பிரதமர் மோடி தனது சொந்த தொகுதியான வாரணாசிக்கு சென்று அங்கு செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

இதில் 10 இந்திய மொழிகள் மற்றும் 5 வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளும் அடங்கும்.




புதுடெல்லி

## ஒரே நேரத்தில் 4 இலக்குகளை தாக்கி சாதனை

வானில் 25 கிலோ மீட்டர் தூரம் வரையிலான இலக்குகளை அழிப்பதற்காக இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஒ) ஆகாஷ் ஏவுகணை என்ற அமைப்பை வடிவமைத்து தயாரித்துள்ளது. இந்த ஏவுகணை அமைப்பு ஒரே நேரத்தில் 4 இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்தது.

இந்த ஏவுகணை அமைப்பு ஞாயிற்றுக்கிழமை (17) விமானப்படை அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டுள்ளது. அப்போது வானில் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டு இருந்த 4 ஆளில்லா விமானங்களை இந்த ஏவுகணை ஒரே நேரத்தில் வெற்றிகரமாக தாக்கி அழித்தது. இது ஒரே ஏவுதல் அலகில் இருந்து செலுத்தப்பட்டமை சிறப்பாகும். இதன் மூலம் ஒரே ஏவுதல் அலகில் இருந்து 4 இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த ஏவுகணை அமைப்பை கொண்டிருக்கும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது.

இது தொடர்பாக டி.ஆர்.டி.ஓ. தனது எக்ஸ் தளத்தில், "ஆகாஷ் ஏவுகணை அமைப்பு இந்திய விமானப்படையால் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.




இங்கிலாந்து பிரிமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல் யுனைட்டெட் போட்டி




இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (16) இரவு நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட் உடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது.

தேசிய, மாகாணத்தில் வெற்றியீட்டிய

## விளையாட்டு வீரர் மதிப்பளிப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில், தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் வெற்றியீட்டிய வீரர்கள் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக பங்குகொண்டு தேசிய, மாகாண மட்டத்திலான போட்டிகளில் சாதனைகள் புரிந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் வீரர்களுக்கான கௌரவிப்பு மற்றும் அவர்களை பயிற்றுவித்த பயிற்றுனருக்கான கௌரவம் அளிக்கும் நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.






திறந்த மாஸ்டர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

## றியாஸ், ஆஷாத்துக்கு வெண்கல பதக்கங்கள்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

திறந்த மாஸ்டர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றிய கல்முனை பிரதேசத்தை சேர்ந்த வீரர்களான ஏ.எம்.றியாஸ் குண்டு போடுதலில் மூன்றாமிடத்தையும், ஏ.எல்.எம்.ஆஷாத் நீளம் பாய்தலில் மூன்றாமிடத்தையும் பெற்று வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டனர்.



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான

## கைப்பந்தாட்டத்தில் கல்முனை பிரகாசித்தது

■ அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் கைப்பந்தாட்டத்தை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபல்யப் படுத்தும் வகையில் இலங்கை பாடசாலைகள் கைப்பந்தாட்ட சம்மேளனத்தால் 12 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமாக ஒழுங்கு செய்திருந்த போட்டி நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மாணவர் இடம்பெற்ற ஆறு போட்டிகளில் வெற்றியையும், இரண்டு போட்டிகளில் தோல்வியையும், ஒரு போட்டியில் வெற்றி தோல்வியற்ற நிலையையும் அடைந்தனர்.

விஜய நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 19 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.